# திருக்குறளும் திவ்யபிரபந்தமும்

**தே.இந்திரகுமாரி.**

**முன்னுரை:** ஒரு தனிமனிதன் அறவழியில் நின்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுலகின் தெய்வத்துள் வைக்கப்பட்டுவான் என்று அறம் உணர்த்தும் இலக்கியமே திருக்குறளாகும். ஒரு தனிமனிதன் பக்தியில் திளைத்து நாத்தழும்பேற நாராயணா என்றுரைத்தால் மீண்டும் பிறவாப் பேரின்பநிலையை அடைவான் என்று அறிவுரைப்பது ஆழ்வார்களின் திவ்யபிரபந்தமாகும். இறைவன் அறவடிவாய்த் திகழ்பவன் என்பதாலும் ஒரே கடலில், சங்கமிக்கும் ஆறுகளைப் போலத் திருக்குறளும் திவ்யபிரபந்தமும் மானுடம் சிறத்தலையே வலியுறுத்துவதாலும், சமயநூலாகிய திவ்யபிரபந்தமும் அறநூலாகிய திருக்குறளும் பல இடங்களில் ஒன்றையொன்று ஒத்திருக்கும் தன்மையினைச் சுட்டிக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சமயநூலும் அறநூலும்:** சமயம் என்பது கடவுட் கொள்கையைப் பின்பற்றுவோர் வகுத்துக் கொண்ட ஒரு ஒழுக்கநெறியாகும். ஐம்புலன்களின் மூலமாகத் தோன்றுகின்ற வேட்கைகளைக் களைந்த நிலையில் இந்நெறியைப் பெறலாம் என்பது சமயவாதிகளின் கோட்பாடாகும். அதாவது கடவுள் இருப்பில் நம்பிக்கை கொண்டு உலகப் படைப்பின் உட்பொருளை உணர்ந்து ஒழுகும் வாழ்க்கை நெறியே சமயம் அல்லது மதம் எனக் குறிப்பிடப்படுகிறது.

**திவ்யபிரபந்தம் :** மனிதன் இறையாற்றலின் மீது கொண்டிருக்கும் அளவற்ற நம்பிக்கையினை சடங்குளாலும், மந்திரங்களாலும் பலவகைப் பாடல்களாலும் புலப்டுத்துகிறான். அவ்வகையில் திருமாலின் மீது அளவற்ற பக்தி கொண்டு அவனது திருக்குணங்களில் ஆழங்காற்பட்டு பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பே நாலாயிரதிவ்யபிரபந்தம் எனனப்படுகிறது.

**திருக்குறள் :** இவ்வுலகில் மானிடராய்ப் பிறந்தவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறியின் அடிப்படையே அறம் எனப்படுகிறது. இத்தகைய அறத்திற்கு வழிகாட்டுவது எண்ணமே ஆகும். எண்ணம் துாய்மையானால் மட்டுமே சொல்லும் செயலும் சிறப்படையும், எண்ணங்களுக்கு நிலைக்களனாய் இருப்பது மனம். எனவே மனம் மாசற்று துாய்மையாக இருக்கும் நிலையே அறநிலையாகும். ஒவ்வொருவரும் இந்நிலையைப் படிப்படியாக அடைவதற்கு சிறந்த வழிகாட்டும் நூலே திருக்குறளாகும்.

**சமயமும் அறமும் ஒன்றே :** வாழ்வியல் நெறிகளைக் கண்ணன் அர்சுனனுக்கு எடுத்துரைக்கும் கீதை தர்மஷேத்ரே" எனும் சொல்லுடனே தொடங்குகிறது. ‘எப்பொழுதெல்லாம் தர்மம் நிலைகுலைந்து அதர்மம் ஓங்குகிறதோ அப்பொழுதெல்லாம் நான் பிறவியெடுப்பேன்[112] எனும் கண்ணபிரானின் வாக்கின்படி இறை அவதாரங்கள் வலியுறுத்துவதும், காக்க முற்படுவதும் அறமே என உணரலாம். தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் சமயமும் அறமும் ஒன்றென நமது முன்னோர் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து[3]**
**அறந்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்[4]**
**அன்றியும் அரசனும் ஒன்றெ அரசன் யான்[5]**

எனவே சமயமும் அறமும் ஒன்றையொன்று சார்ந்தும். கருத்துக்களில் ஒன்றியும். வாழ்வியல் கொள்கைகளை உள்ளடக்கியும் உள்ளன எனலாம்.

**காலத்தை வென்றவை : 1:4** எந்த வொரு இலக்கியத்தின் சிறப்பும் அது தோன்றிய காலத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படும் மட்டுமே முழுமையாக வெளிப்படுகிறது. களப்பிரர் காலத்தில் மக்களிடையே பொய், களவு. ஊழல், ஒழுக்கமின்மை போன்றவை மேலோங்கிவிட்ட காரணத்தால் நீதிக் கருத்துகளை வலியுறுத்தும் இலக்கியங்கள் தேவைப்பட்டன. இவ்வகையில் தோன்றிய அறநூல்கள் பலவற்றுமள் திருக்குறளே மிகச்சிறந்த நூலாய் எக்காலத்திலும் எந்நாட்டவருக்கும் ஏற்ற ஒப்பற்ற பொதுநூலாய்த் திகழ்வதால்.

**எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்**
**முப்பால் மொழிந்த மொழி[6]**

எனப் பாராட்டப்படுகிறது. சமண பௌத்த மதங்களுக்கு ஆதரவளித்து வந்த களப்பிரரின் அரசியல் செல்வாக்கு ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் வலுவிழக்க,

தெற்கே பாண்டியர்களும் வடக்கே பல்லவர்களும் அவர்களை வென்று இருந்து சமயத்திற்கு புத்துயிரளித்தனர். சமயகாலமாகிய பல்லவர் காலத்தில் தோன்றியவர்களே ஆழ்வார்கள் என்றாலும் இதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. மக்களுக்கு சமய சமூகம் பொருளாதாரம் அரசியல் ஆகியனப் பற்றி தெளிவான கருத்து தேவைப்பட்டதையும் வள்ளுவர் அறிந்தார். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய எழுந்ததே திருக்குறள். வள்ளுவர் சமயத்தைப் புறக்கணிக்கவோ அல்லது வெறுக்கவோ பயனற்றது என்றொ கருதவில்லை.[7] இன்றளவும் உலகப் பொதுமறையாய் அறிஞர் உள்ளங்களில் தெள்ளமிழ்தாய்த் திருக்குறள் தித்திப்பதாலும், பாலேய்த் தமிழ் என வைணவர்களால் போற்றப்படும் ஆழ்வார்ப் பாசுரங்கள் வைணவ இல்லங்களிலும், திருக்கோயில்களிலும் பாராயணம் செய்யப்படுவதாலும் காலத்தை வெல்லும் தன்மையில் இரண்டு இலக்கியங்களும் ஒத்துள்ளன.

**திருக்குறள் மொழியும், திருவாய் மொழியும்:** திருக்குறள் காலத்திற்குப் பிற்பட்டவரான, ஓதாதுணர்ந்த ஞானச் செல்வரான நம்மாழ்வார் நான்மறைகளுடன் திருக்குறளையும் நன்கு கற்றறிந்தவர் என்பதை அவரது திருவாய் மொழிப் பாசுரங்கள் உணர்த்துகின்றது. பல குறட்பாக்களின் தொடர்களும், பொருள் ஒப்புமைகளும் திருவாய்மொழியில் இடம்பெற்றுள்ள தன்மையே இதற்குச் சான்றாகும். தொல்காப்பியர் காலத்திலேயே வாழ்க்கைப் பயணத்திற்குத் துணையாகச் சேயோன், மாயோன், வேந்தன், வருணன்[8] போன்ற கடவுள்கள் வணங்கப்பட்டனர் என அறியமுடிகிறது. காலம் செல்லச் செல்ல அந்தந்த நிலத்தில் வாழுகின்ற மக்கள் தத்தம் நிலவளத்திற்கு ஏற்பப் பெயரமைந்த கடவுள்கள் யாவும் ஓரே பரம் பொருளை உணர்த்துகின்றன என்ற கொள்கையை மறந்து தெய்வங்களுக்குள் ஏற்றத்தாழ்வினை விளைவித்தனர். இச்சூழலில் வள்ளுவரோ இறைவன், மெய்பொருள், செம்பொருள் எனும் பொதுப் பெயர்களால் இறைவனைக் குறிப்பிடுகிறார்.

**ஆதிபகவன் :** அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம் என்பது பரிமேலழகரின் கூற்று. அதன்படி மனிதராய்ப் பிறந்தவர்கள் கடவுளை வாழ்த்தி வணங்குவதையே தமது தலையாய் அறமாகக் கொள்ளவேண்டும் என உணர்த்த விரும்பிய வள்ளுவர் எல்லாம் வல்ல இறைவனை ஆண்பால் விகுதியுடன் ‘ஆதிபகவன்’ என்றழைக்கிறார். அறத்தை வலியுறுத்துவதையே தனது குறிக்கோளாகக் கொண்ட வள்ளுவர் அறவடிவாய்த் திகழும் இறைவனது சிறப்புகளை விளக்க முற்படும்போது ‘அறம்’ எனும் சொல்லின் முதலெழுத்தாகிய அகரத்துடன் ஒப்பிடுவது நயமிக்க ஒன்றாகும். அகரம் தனித்தும் உயிர் எழுத்துக்களுடன் நுட்பமாய்க் கலந்தும், மெய்யெழுத்துக்களுடன் இணைந்தும் இயங்குகிறது. இறைவனும் சார்பு ஒன்றின்றித் தனித்தும். உலக உயிர்களுடன் கலந்தும், அவற்றின் வினைகளுக்குமச் சான்றாய் நின்றும் உலகினை இயக்குகிறான். திருமாலின் இத்தன்மையை நம்மாழ்வார்.

புலனொடு புலன் அவன் ஒழிவிலன் : பரந்தஅந்
நலனுடை ஒருவன்[12]

எனப் பாராட்டுகிறார் எழுத்துக்களில் நான் அகரமாயிருக்கிறேன் என்பது கண்ணபிரான் கூற்று. வைணவத் திருவெட்டெழுத்து மந்திரத்தின் முதல் பதமான ஓம் என்பதில் அடங்கியுள்ள அ, ம, உ எனும் எழுத்துகளில் முதன்மையாவதும் அகரமேயாகும். மேலும் பகவான் எனும் வடசொல் விகாரமாய் பகவன் என முதற் குறளில் இடம்பெற்றுள்ளது. பேராளுமை, வீர்யம், புகழ் செல்வம், அறிவு, பேரறிவு இவை ஆறு குணங்களையும் கொண்டவரே ‘பகவான்’ எனப்படுகிறார்.[14] திருமாலே இத்தகைய குணங்களைக் கொண்டவன் என்பதை நம்மாழ்வார்.

கணக்கறு நலத்தினன் அந்தமில்
ஆதிஅம் பகவன்[15]

எனும் பாசுரவடிகளில் உணர்த்துகிறார். ஆதிமூலமாய்த் திகழும் திருமால் திருப்பாற்கடலில் ஆதிசேடனாகிய பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கிறான். திருமாலின் இத்தன்மையினை.

முழுமூ வுலகாதிக் கெல்லாம் முதல்தனி உன்னை
ஆதியான் வானவர் ஆதி என்கோ[18]

எனப் பலவாறாக நம்மாழ்வார் பாடிமகிழ்கிறார்.

**அறவாழி அந்தணன் :** அறக் கடவுளாகிய திருமாலின் திருக்கரத்திலுள்ள சக்கரம் அறச்சக்கரம் எனப்படுகிறது. அண்டங்கள் அனைத்தையும் உருவாக்குதலும் நிலைபெறச் செய்தலும் பின்பு அவற்றை நீக்குதலுமாகிய முத்தொழில்களையும் இடைவிடாமல் அவன் செய்து வருவதையே அச்சக்கரச் சுழற்சி உணர்த்துகிறது. அத்தகைய பேராற்றல் மிக்கவனின் திருவடிகளை அடைந்தவர்களைத் தவிர மற்றவர்களால் பொருட்கடலையும் அதனால் உண்டாகும் சிற்றின்பக் கடலையும் கடக்க இயலாது என உணர்த்துகிறார் வள்ளுவர்.

அறச்சக்கரத்தை ஏந்திய அறவோனாய் திகழும் திருமாலையே அறவாழி அந்தணன[119] என்கிறார். அந்தணர் என்போர் அறவோர்[120] என மற்றொரு குறளில் வள்ளுவர் இக்கருத்தினைத் தெளிவுபடுத்துகிறார். பிறவித் துயர் நீங்க பற்றறுத்து ஞானநிலையில் ஊன்றி நின்று ஆன்ம ஒளியைக் காண விரும்புவோர் அறவோனாய் ஆழிப்படை ஏந்திய அருளாளனாகிய மாயவனை மறதியின்றி மனதில் வைத்துப் போற்றுவர் என்பது நம்மாழ்வாரின் கூற்று.

அறவனை ஆழிப்படை அந்தணனை
மறவியை யின்றி மனத்துவைப் பாரே[21]

எனும் பாசுரவடிவகளில் இவ்வாறு வள்ளுவரின் கருத்தினை ஆழ்வார் வழிமொழிகின்றார். திருமாலின் திருக்கையிலுள்ள ஆழி தீயவர்களைத் தண்டிக்கும் இயல்புடையதால் ஆழிப்படை எனப்பட்டது.

**வேண்டுதல் வேண்டாமை இலான் :** இறைவனது விருப்பு வெறுப்பற்றத் தன்மையை வேண்டுதல் வேண்டாமை இலானடி'[22] என வள்ளுவர் விவரிக்க, நம்மாழ்வாரும்.

கொள்கை கொளாமை யிலாதான்[23]

என இறைவனது நடுநிலைத் தன்மையைப் பாராட்டுகிறார்.

'இவன் பிறவியாலும் தொழிலாலும் ஞானத்தாலும் உயர்ந்தானொருவன். இவனிடத்தில் அந்தரங்கத் தொண்டினைக் கொள்வோம். இவன் தன் திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல் சிலரை ஆதரித்தல் செய்யான்' என இறைவனது சமநோக்குப் பார்வை இப்பாசுரத்தில் வெளிப்படுகிறது.

**இருவினையும் சேரா :** 'இறையன்பு நிறைந்தவர்களை அறியாமையினை ஏற்படுத்தும் இருவினைகளும் நெருங்குவதில்லை எனும் கருத்தினை வள்ளுவர்.

இருள்சேர் இருவினையும் சேரா'[25] எனும் குறட் தொடரில் உணர்த்துகிறார். திருவாய்மொழியும். இருமை வினைகடிவா என்று அடியார்களின் வினைகளைத் தீர்க்கும் இறைப்பண்பினைப் பாராட்டுகிறர். இங்கு நல்வினை, தீவினைஎனுமிரண்டே 'இருமை வினை' எனப்பட்டது. இவ்விரண்டும் வேறுபட்டவை என்றாலும் வீடு பேற்றினை அடைவதற்கு இவை இரண்டுமே தடைகளாயிருப்பதை இருமை வினை எனும் சொல் சுட்டுகிறது.

**தனக்குவமை இலாதான்:** வைணவத் தத்துவத்தின்படி பழ அறிவுள்ள பொருள், அறிவில் பொருள், இறை ஆகிய முப்பொருட்களில் முதலிரண்டின் தன்மைகளைக் காட்டிலும் இறைவனது தன்மை உயர்ந்திருக்கும், தன் குணங்களில் உயர்ந்து தனக்குவமையாக வேறொன்றும் இலாத வகையில் சிறந்து நிற்கும் இறைப்பெரு நிலையை வள்ளுவர் 'தனக்குவமை இலாதான'[27] எனப் பாராட்டுகிறார். அவனது திருவடிகளைச் சரணடைந்தால் மட்டுமே நமது மனக்கவலைகளிலிருந்து விடுபட முடியும் எனவும் அறிவுறுத்துகிறார்.

திருமாலே தனக்கு ஒப்பானவர்களும், தன்னைவிடச் சிறந்தவர்களும் இல்லாதவன் எனும் கருத்தை நம்மாழ்வாரும்.

ஒத்தர் மிக்காரை இலையாய மாமாயா[28].
தன் ஒப்பாரில்லப்பன்[29]
என வியக்கிறார்.

**தாளை வணங்குக :** கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை[30] என்ற குறளில் எண் வகைப்பட்ட குணங்களையுடைய திருமாலின் திருவடிகளை வணங்காத தலைகள் தந்தமக்கு ஏற்ற புலன்களைத் தன் வயமாக்காத பொறிகள் போலப் பயன்படாது என்கிறார்.

எண் சாண் உடம்பிற்குத் தலைமையாய் விளங்கும் தலையிலே தான் 'மூளை' எனும் முக்கியப் பகுதி அமைந்துள்ளது. இம்மூளையானது மண்டலமாகவும் ஐம்புலன்களை செயற்படுத்தும் நிலைக்களனாகவும் இருக்கிறது. எனவே ஒருவரைத் தலையால் வணங்குவது என்றால் அகமும் புறமும் ஒன்றிணைந்து வழிபடுகிறது என அறியலாம். அத்தனைய வழிபாடே சிறந்ததென்பதை இக்குறப்பா உறுதிபடுத்துகிறது.

தாள்கள் தலையில் வணங்கி - நாள் கடலைக் கழிமினே[31] என நம்மாழ்வாரும் இறைவனது திருவடிகளைத் தலையால் வணங்கிப் பிறவிப் பயனடையுமாறு வலியுறுத்துகிறார்.

திருவள்ளுவர் குறிப்பிடும் எண்குணங்களைத் 'தன் வயத்தனாதல் துாயவுடம்பினனாதல் இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல்ஈ இயல்பாகவே பாசங்களில்இணங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவிவை'[32] எனப் பரிமேழலகர் பட்டியலிடுகிறார்.

வைணவ நூல்களோ திருமாலின் எண்வகைப்பட்ட குணங்களென வாத்ஸல்யம் (தாயன்பு) ஸவாமித்வம் (தலைவனாம் தன்மை) ஸௌசீல்யம் (அறப்பெரியவன் அறந்தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கும் தன்மை) ஸௌசீலப்யம் (எளிமை) அறிவு, சக்தி ப்ராப்தி (உரிமை) பூர்த்தி[32] போன்றவற்றைக் குறிப்பிடுகின்றன.

மேலும் இறைவனது திருவடிகளில் சரணடைவதே வைணவத்தில் சரணாகதி எனும் உயர்ந்த தததுவமாகப் போற்றப்படுகிறது. தனக்குவமை இலாதான்தாள், எண்குணத்தான் தாள் இறைவனடி, அந்தணன்தாள், நாற்றாள் எனப்பலவாறாக வள்ளுவர் இறைவனது திருவடிகளைப் போற்றுவது அவர் சரணாகதி தத்துவத்தில் ஈடுபட்ட தன்மையினைப் புலப்படுத்துகிறது.

**பற்றற்றான்:** இறை இயல்பை நன்கறிந்த பின் ஓருயிர் இறைவனை அடைவதற்கு அவனையே தக்க நெறியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் எனும் கருத்தினை திருக்குறளும்

பற்றுக பற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றிக் கொள்வதே இறைநிலை அடையச் சிறந்த வழி என வள்ளுவர் இக்குறட்பாவில் உணர்த்த, நம்மாழ்வாரோ,

அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
செற்றது மன்உறில் அற்றிறைப் பற்றே

எனும் பாசுரவடிகளில் பற்றற்ற நிலையில் உயிர் விடுதலை அடையும் இந்நிலையானது பற்றற்ற இறைவனைப் பற்றினால் மட்டுமே ஏற்படுகிறது என உணர்த்துகிறார்.

மேலும் பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் எனக் கூறும் வள்ளுவம் இவ்வுலகப் பற்றுகளுக்கு ஆசையே அடிப்படைக் காரணமாக உள்ளதால் ஆசைகளை ஒழிக்குமாறும் அற்றவர் என்பார் அவாவற்றார், எனக் கூறி அறிவுறுத்துகிறார்.

**ஐம்பூதங்களாய்த் திகழ்பவன் :** பரம்பொருளே பஞ்சபூதங்களாகவும் அவற்றின் குணங்களாகவும் அவை கலந்த உலகமாவும், அவ்வுலகின் பலவகை உயிர்களாகவும் திகழ்கிறான் எனும் இறைத் தத்துவத்தை தெய்வப்புலவர்,

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்னு ஐந்தின
வகை தெரிவான் கட்டே உலகு.[38]

எனும் மறை மொழியால் உணர்த்துகிறார். இக்குறளில் 'ஐந்தின்' என்பது சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐவகைக் குணங்களையும், 'வகை' என்பது அவற்றின் குணிகளையும் அதாவது பொருட்களையும் குறிக்கும். குணத்தை உடையது குணியாகும். இங்கு குறிக்கப்படும் பஞ்சபூதங்களாகிய குணிகளின் வடிவாய் விளங்குபவன் இறைவன் என்பது வள்ளுவர் கூற்று.

உணன்னு சுவையொளி ஊறுஓசை நாற்றமுற்று நீயே[39]

எனும் பாசுரவடியில் சுவை, ஒளி, உள்ளிட்ட குணங்களாகவும், நீராய் நிலனாய்த் தீயாய் காலாய் நெடுவானாய[40] என மற்றொரு பாசுரத்தில் குணிகளாகவும் இறைவன் விளங்கும் தன்மையை எடுத்துரைக்கிறார்.

பூதங்கள் ஐந்தும் பொறிஅவை ஐந்துளும் ஏதும் படஞ்செய்து இருந்து புறநிலை எனப் பஞ்சபூதங்களும் அவற்றின் குணங்களும் கலந்ததே இவ்வுலகம் எனும் திருமூலர்பாடல் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

**உலகளந்தான் :** இந்து சமயம் போற்றும் கடவுளரில் திருமாலைத் தவிர வேறெந்த தெய்வமும் உலகளந்ததாகப் புராணக் செய்திகள் இல்லை. அரக்கர் குலத்தில் பிறந்த மகாபலிச் சக்கரவர்த்தி என்பவன் இந்திரனிடமிருந்து கவர்ந்து சென்று உலகங்களை மீட்கும் பொருட்டு திருமால் வாமனனாய் அவதரித்து அவனிடம் மூவடி நிலம இரந்து பின்பு அவற்றை அளப்பதற்காக நெடியோனாய் வானில் உயர்ந்தான். இந்நிகழ்ச்சியைத் தன் திருவடிகளால் இப்பரந்த உலகத்தை அளந்த கடவுள் தாவிய பரப்பனைத்தனையும் சோம்பல் இல்லாத அரசன் மட்டுமே ஒருசேர அடைவான் என உணர்த்தும் குறட்பாவில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பாமரு மூவுலகு மளந்த பற்ப பாதாவோ என நம்மாழவார் திருமாலின் தாமரைப் பாதங்கள் மூவுலகங்களையும அளந்த செய்திளைப் பாடுகிறார்.

**தாமரைக் கண்ணன்** : தாமரை மலரில் வாசம் செய்யும் திருமகளுடன் உறையும் திருமாலின் திருக்கண்களைத் தாமரைக் கண்களென வருணிப்பது மரபு. லஷ்மீகாந்தம் கமலநயனம் என்று திருமாலைப் போற்றுவர். அவ்வாறே வள்ளுவரும்.

தாமரைக் கண்ணான் உலகு எனத் திருமாலைப் பாராட்டுகிறாா.

தாமரைக் கண்ணன் விண்ணோா் பரவுந் தலைமகனை[46] கோலமே தாமரைக் கண்ணதோா் அஞ்சன நீலமே! என்று நம்மாழ்வாரும் திருமாலின் திருக்க! ண்களைப் பாடுகிறாா்.

அரவம் சுமப்பது ஓா் அஞ்சன்னணை மலையே
அம்மலை பூத்தது ஓா் அரவிந்த வனமே

எனத் திருவரங்கத்தில் பள்ளி கொண்ட பெருமாளைத் தாமரைக்காடென அஷ்டப்பிரபந்தம் பாடுவது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**காமத்துப்பாலும் அகப்பாசுரங்களும் :** ஒரு மொழிக்கு அழகு தருபவை இலக்கியங்களே. மனித வாழ்க்கையின் எழுத்துருவப் பிரதிப்பலிப்பே இலக்கியம் எனப்படுகிறது. இத்தகைய இலக்கியங்கள் மூலமாக நமக்குப் பல வாழ்வியல் கூறுகளை விவரிக்க முற்பட்ட நம் முன்னோா் அவற்றை அகம் என்றும் புறம் என்றும் இரண்டாகப் பிரித்தனா். உள்ளம் உணா்நது துய்த்ததைப் பிறருக்கு உணா்த்தமுடியாதவாறு அமைந்திருக்கும் பண்பே அகம்நுதலியது எனப்படுகிறது. திருக்குறளின் காமத்துப்பா் பகுதி ஒத்த அன்புடைய ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் இடையேயான மெல்லிய மன உணா்வுகளைச் சித்தரிக்கும் அகக் குறட்பாக்களின் மூலமாகப் பல அறக்கருத்துகளை விவரிக்கிறது.

'சமூக ஒழுங்கு பற்றிய வள்ளுவரின் பாா்வை காமத்தை துூயதாக மாற்றிவிடுகிறது. காமத்துப்பால் வெளிப்படையாகச் சிற்றின்பத்தையும் உள்ளுறையாக பேரின்பத்தையுமே கூறுகிறது. திருக்குறளின் காமத்துப்பாலில் பேரின்பத்தின் வோ்களைக் காணமுடிவதால் ஆழ்வாா்ப் பாசுரங்களுடன் ஒப்பிடமுடிகிறது' எனும் கூற்று காமத்துப்பாலின் சிறப்பினை உணா்த்துகிறது.

நம் முன்னோா் இன்பத்தை இருவகையாகப் பிரித்துள்ளனா். ஒன்று சிற்றின்பம் என்றும் மற்றொன்று பேரின்ப்ம் எனவும் குறிக்கப்படுகிறது. சிலநேரம் மட்டுமே நிலைத்திருப்பது சிற்றின்பமாயிருக்க என்றும் நிலைத்து நிற்பது பேரின்பம் எனப்படுகிறது. உலகில் நாம் சுவைக்கும் அனைத்துமே சிற்றின்பங்களாகும். கடவுளை உணா்தலே பேரின்பமாகும், சிற்றின்பத்திற்கு உலகப்பொருட்கள் கருவியாகவும், பேரின்பத்திற்கு இறைவனுடைய வடிவம், குணம், செயல் போன்றவை கருவிகளாகவும் விளங்குகின்றன.

மருந்தினை உண்ண மறுக்கும் சிறு குழந்தைக்குத் தேனுடன் கலந்து தரப்படும் மருந்து போல உலக மக்களுக்கு சிற்றின்பத்தின் மூலம் பேரின்பத்தை உணா்த்த முற்பட்டே ஆழ்வாா்கள், நாயக - நாயகி முறையில் அகப் பாசுங்களைப் பாடியுள்ளனா். அவ்வாறு பாடும் போது தாய், தோழி, தலைவி எனப் பல மனநிலைகளில் பாசுரங்களை அமைத்துள்ளனா்.

**ஒண்டொடி இன்பம் :** திருக்குறளில் களவியல் வாழ்வில் ஒளிபொருந்திய வளையலணிந்த தலைவியிடத்தே உள்ள ஐம்புல இன்பங்களை விவரிக்கும் தலைவன்.

கண்டு கேட்டு உண்டு பாா்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொழ கண்ணே உள[50]
எனக் கூறுகிறான்.
கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி
கண்டவின்பந் தெரியவரிய வளவவிலாச் சிற்றின்பம்
ஒண்டொழயாள் திமகளும் நியுமே நிலாநிற்ப

கண்டகதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவழயே

இப்பாசுரத்தில், திருமகளும் திருமாலும் நின்ற அழகுநிலை ஐம்புல இன்பங்களோடு உள்ளதாய் விளங்க அவ்வரிய காட்சியைக் கண்டு மகிழ்ந்து அப்பெருமாளின் திருவடியை அடைந்து பேரின்பம் பெற்றதாய் நம்மாழ்வார் பாடுகிறார்.

**கடலன்ன காதல் :** எம்பெருமானை நாயக - நாயகி முறையில் பாசுரம் பாடும் போது நம்மாழ்வார் தாய்நிலையில் பராங்குசநாயகியாகத் தன் தோழியிடம் கூற்று நிகழ்த்துவதாய்ப பாடியுள்ளார். அவற்றுள்,

ஊரவர் கவ்வை யெருவிட் டன்னைசொல் நீர்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்

எனும் பாசுரவடிகளில், தோழி! ஊரார் அலரை எருவாக இட்டு, அன்னையின் கடிந்துரையை நீராகப் பாய்ச்சி, என் நெஞ்ச வயலில் அன்பாகிய நெல்லினை விதைத்துக் கடலன்னக் காதலை விளைவித்த கண்ணன் சிறந்தவன் எனக் கூறுகிறாள். இப்பாசுரத்தை,

ஊரவர் கவ்வை எருவாக அன்னை சொல்
நீராக நீளுமின் நோய்[53]

எனும் வள்ளுவரின் வாய்மொழியை நோக்கி இய்ற்றினார் எனலாம், காதலை நோயாக வள்ளுவர் சித்தரிக்க அதனை ஆழ்வாரும் குறிப்பால் உணர்த்துகிறார், மேலும், மற்றொரு குறட்பாவில்

'ஏமப புணைமன்னும் இல்' என வள்ளுவர் காட்டும் தலைவி தனது கடல் போன்ற காம நோயைத் தாண்டிச் செல்ல வலுவான ஓடம் இல்லை என வருந்துகிறாள்.

திருமாலையே தனது மணாளனாக நினைத்துப் பல பாசுரங்களைப் பாடியருளிய ஆண்டாளும் இத்தலைவியைப் போலவே

துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி
பெறாது உழல்கின்றேன்[55]

எனத் துன்பக்கடலில் வருந்தும் தன்னை மீட்க வைகுந்தனாகிய தோணியைக் காணாமல் தவிப்பதாய்ப் பாடுகிறாள்.

**கழல்வளை :** தன்னை விட்டுப் பிரிந்த தலைவனுடன் தன் நெஞ்சையும் போகவிட்டுத் தனிமையில் காதல் நோயால் வருந்தும் தலைவி, அந்நோயக்கு மருந்தாகியத் தன் தலைவனைக் காணாமல் நாள்தோறும் மெலிந்து கொண்டிருந்தாள். அதனால் அவளது கரங்களை விட்டு வளையல்கள் கழன்று விழுந்த காட்சியினைத் திருவள்ளுவர்.

முன்கை இறை நின்றவளை[56]

எனும் குறட்பாவில் விவரிக்கிறார். திருமாலின் மீது தான் கொண்ட அளவற்ற காதல் தன் உள்ளத்தை உருக்கி. உடலினை மெலியச் செய்து, கைவளையல்களை கழன்று விழச் செய்ததாய் ஆண்டாள்.

எழுகமலப் பூவழகா் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே

எனப் பாடுகிறாள்.

**மடலூர்தல் :** தமிழ் அகப்பொருள் இலக்கியங்களில் ஒரு துறையாகக் காணப்படும் 'மடல்' திவ்ய பிரபந்தமாகிய பக்தி இலக்கியத்தில் புதுத்திருப்பம் பெற்றுத் தனி இலக்கிய வகையாக வளர்ந்துள்ளது.

தன்னை விரும்பிய தலைவியை அடையப்பெறாத தலைவன் பனைமடல்களால் ஒரு குதிரையின் வடிவம் செய்து அதன் மீதேறி பித்தனைப் போல் ஊர் நடுவே தோன்றித் தன் காதலை வெளிப்படுத்த, அவனைக் கண்டு இரக்கம் கொண்ட ஊரார் பெண்ணின் பெற்றோரிடம் பரிந்து பேச அவர்களும் மகட்கொடைக்கு இசைவதே 'மடலூர்தல்' எனப்படுகிறது.

காதல் வயப்படுதலாவது ஆண், பெண் இருவருக்குமே உரிய ஒரு பொதுப்பண்பாகும். என்றாலும்,

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான்

எனும் தொல்காப்பிய நூற்பா மகளிர் மடலேறுவதில்லை என உணர்த்துகிறது. இக்கருத்தை வள்ளுவரும்,

கடலன்ன காம முழந்தும் மடலேறாப்

பெண்ணிற் பெருந்தக்க தில[58]
என வழி மொழிகிறார்.
இம்மரபுக்கு மாறாகத் திருமால் மீது காதல் கொண்ட தலைவி அவனை அடையப்பெறாத நிலையில் மடலேறத் துணிந்ததாகத் திருமங்கையாழ்வார்,

ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான்
வாரார்பூம் பெண்ணை மடல்[60] என்றும்
உலகறிய ஊர்வன் நான்
முன்னி முளைந்தெழுந் தோங்கி, யொளிபரந்த
மன்னியபூப் பெண்ணை மடல்[61]

என்றும் பாடுகிறார்.

நம்மாழ்வாரும் பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி மடலூரத் துணிவதாக 'மாசறுசோதி' எனும் திருவாய் மொழியில் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஆழ்வார்கள் பெண் மடலேறுவதாகப் புதிய சிந்தனையை உருவாக்கி வள்ளுவரிலிருந்து வேறுபடுகின்றனர்.

**இல்வாழ்க்கை :** பொதுவாகத் தமிழ் பக்தி இலக்கியப் பனுவல்களின் தன்மைகளை, இறைவனை அறிந்து அவனுடன் ஒன்றாகும் வேட்கையுரைத்தல், உள்ளத்தால் ஒன்றுபட்டவரின் அனுபவத்தை வெளிப்படுத்தல், உலகப் பற்றுகளை வெறுத்துரைத்தல், வீடுபேறடையும் வழிமுறைகளை ஆராய்தல் என வரிசைபடுத்தலாம். இவ்வகையில் பல பிரபந்தப் பாசுரங்கள் இறையருளைப் பெறுவதற்கும். வீடுபேற்றினை அடைவதற்கும் இல்லறம் தடையாயிருப்பதாகக் கருதுகின்றன. எடுத்துக்காட்டாக,

ஆண்டாய்! உனைக் காண்பதோர் அருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனை வாழ்க்கையை - விண்ணகர் மேயவனே![63]

எனத் திருமங்கையாழ்வார் திருவிண்ணகரில் வீற்றிருக்கும் திருமாலைப் போற்றிப் பாடும் போது பத்துப் பாசுரங்களிலும் பாசுர இறுதி அடிகளில் குறிப்பிடுகிறார்.

உலகப் பற்றுகளில் உழல்வது உயர்ந்த சிந்தனைகளைத் தடுக்கும் எனும் மரபுப் பார்வையை வள்ளுவர் மறுக்கவில்லை என்றாலும் மனித உடல் எடுத்ததின் பயனாக ஒருவன் துய்க்கக்கூடிய அளவான உரிமை இன்பங்களை அனுபவிக்க வேணடும் என்றே எண்ணுகிறார். இதற்குரிய நெறியாக இல்லறத்தைத் தேர்ந்தெடுக்கும் வள்ளுவர், அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என இல்லறத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். இவ்வுலகில் ஒருவன் அறவழியில் வாழ்ந்து வந்தால் அவன் வேறுநெறியில் சென்று பெறத்தக்கது எதுவுமில்லை எனவும் பாராட்டுகிறார்.

"வைதிக சமயங்கள் எல்லா அறத்தையும் வீடு பேற்றையும் மட்டுமே போற்றின. அறம் என்பதும் வீடு பேற்றிற்கு - நிர்வாணத்திற்கு - கருவி எனவே அவைகள் கருதின. ஆனால வள்ளுவர் அறம் பொருள் இன்பங்களைச் சமமாகப் போற்றிப் பேசுதலைக் குறள் கற்பார் உணரலாம்." [64]

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை[65]
பொருளில்லார்க்கு இல்வுலகம் இல்லை[66]
மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு?[67]

என்னும் கருத்துக்கள் இவ்வகையில் சான்றாக நிற்கின்றன. எனவே இல்லறத்தைப் பற்றிய வள்ளுவரின் கண்ணோட்டம் ஆழ்வார்களிடமிருந்து வேறுபடுகிறது எனலாம்.

**வாழ்வியற் கூறுகளில் வள்ளுவரும், ஆழ்வார்களும் :** ஒரு தனிமனித வாழ்க்கையைச் சமுதாய வாழ்க்கையோடு இணைத்து வளர்ப்பதே சமயமாகும். அவ்வாறு சமுதாயத்தை இணைத்து அணைக்க அன்பும் அறமும் தேவை. எனவே தான் தமிழிலக்கியங்கள் சமுதாய ஒழுங்கியலை வலியுறுத்தின. அத்தகைய வாழ்வியற் சிந்தனைகளை எடுத்துக் கூறுகையில் வள்ளுவரும் ஆழ்வார்களும் ஒருமித்தக் கருத்துகளைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**நிலையாமை : 4:1** ஒவ்வொரு நாளும் நாம் உழைத்த களைப்பினைப் போக்கும் பொருட்டே உறங்கி விழிக்கிறோம். அது போலவே பிறப்பும் இறப்பும் தொடர்கிறது. பிறப்பு வினைகளை அனுபவிக்கவும். இறப்பு அக்களைப்பைப் போக்குவதற்குமே அமைந்துள்ளது. அதனால் தான் வள்ளுவர்,

உறங்குவது போலும் சாக்காடு[68] என மரணத்தை விவரிக்கிறார். இதனை ஒட்டியே பெரியாழ்வாரும்,

காலும் கையும் விதிர் விதிர்த்து ஏறிக்

கண் உறக்கமது ஆவதன் முன்னம்[69]

எனக் கண்கள் நீங்காத உறக்கத்தைப் பெறுமுன்னர் கடல் வண்ணனை மனதில் எண்ணவேண்டுகிறார்.

**மழலை இன்பம் :**

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே[70]

என்பது பாண்டியன் அறிவுடை நம்பி கூற்று. இல்லறமன்றி வேறு நல்லறம் இல்லை என வலியுறுத்த விரும்பிய வள்ளுவரும் மக்கட்பேற்றின் சிறப்பினைப் பல்வாறாக விவரிக்கிறார். அப்போது தம் மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு பெற்றோருக்கு அமிழ்தை விட அதிக இனிமைத் தரும் என்கிறார்.[71]

கண்ணனை மகனாகப் பெற்றெடுத்தும் ஆயர்பாடி யசோதையைப் போல் அவனைப் பேணி காத்து வளர்க்கும் பேறினைப் பெறவில்லையே எனத் தேவகி வருந்திப் புலம்புவதாகக் குலசேகராழ்வார் பாடிய பாசுரமொன்றில் வள்ளுவரின் இக்கருத்து எதிரொலிக்கிறது.

வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க் கொடிண்ட அழசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடு வினையேன்![72]

இப்பாசுரவடிகள் குழந்தைக் கண்ணனின் பிள்ளைத் திருவிளையாடலை படம் பிடித்துக் காட்டுகிறது.

**விருந்து :** விருந்தினரை வரவேற்று உபசரிப்பதே இல்லறத்தின் சிறந்த நிலையாகும். தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை![73]

எனக் கோவலன் பிரிவால் விருந்தினரை உபசரிக்க இயலாத தன் நிலையை நினைத்து கண்ணகி வருந்துகிறாள். விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறுகையில் வள்ளுவரோ, வந்த விருந்தினரைப் போற்றி இனி வரும் விருந்தினரை எதிர்பார்ப்பவன் வானுலகத் தேவர்க்கு நல் விருந்தாவான்[74] என்கிறார். இக்கூற்றைப் பின்பற்றி திருவரங்கத் திருத்தலத்தின் சிறப்புகளைப் பாடும் பெரியாழ்வாரும்.

வருவிருந்தை யளித்திருப்பார்
சிறப்புடைய மறைவர் வாழ்
திருவரங்க மென்பதுவே[75]

என விருந்தோம்பும் பண்பைப் பாராட்டுகிறார்.

**முடிவுரை :** பக்தியின் விளைநிலம் பைந்தமிழ்நாடு. மனதைப் பண்படுத்தி, உணர்வுகளை ஒழுங்குபபடுத்தி, உள்ளத்தை உறுதிபடுத்தி மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்ட வந்த ஞானச் செல்வர்களே ஆழ்வார்களாவர் ஐம்பொறிகளால் பார்க்கப்படும் புற உலகு எனும் திரைக்குப் பின்னால் பொறிகளால் காணவியலாத உள்ளத்தால் மட்டும் உணரத்தக்க மாபெரும் ஆற்றலைத் திருமாலின் வடிவில் கண்ட அவர்கள் தங்களது பாசரங்களின் மூலமாக ஆன்மா படும் அவலங்களை உணர்த்தி, ஆண்டவனை அறிந்து பேரின்பப் பெருநிலையைப் பெறுமாறு அறிவுறுத்தினர். பொதுவாக சமயங்கள் வலியுறுத்தும் இத்தனைய ஞானத்தைப் பெறுவதற்கு குருவின் உத்தேசம் தேவை. அவ்வாறின்றி நமக்கு நாமே ஞானத்தைப் பெற வழிகாட்டும் திறத்தில் முதன்மை பெறும் நூல் திருக்குறளேயாகும். எனவே காலந்தோறும் தோன்றுகின்ற மக்களின் மனப்போகிற்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில் விளக்கம் தரப்பயன்படும் திருக்குறளையும் திருமாலடியாராய்த் திகழ்ந்த ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தப் பாசுரங்களையும் ஒப்பிடுவது தமிழன்னைக்குச் செய்யப்படும் சிறந்த ஆராதனையேயாகும்.

**அடிக்குறிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ‘அண்ணா’ | ஸ்ரீமத்பகவதகீதை (பொழிப்புரையுடன் கூடியது | ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை ப. எ: 3 |
| 2. | ‘அண்ணா’ | ஸ்ரீமத்பகவத் கீதை (பொழிப்புரையுடன் கூடியது | ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை சு. எ:8 ப.எ:38 |

| | | | |
|---|---|---|---|
| 3. | ஔவை க.துரைசாமி பிள்ளை உரை | புறநானூறு ( 201-400 பா) | சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம் 1996 பா. எ: 397 |
| 4. | சிலப்பதிகாரம் ஞா. மாணிக்கவாசகன் | தெளிவுரை | உமாபதிப்பு சென்னை பா:(1.4.11) ப.எ:238 |
| 5. | வித்வான் எம். நாராயணவேலுபிள்ள | ஐங்குறுநூறு | நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் சென்னை பா. எ:387 ப.எ:243 |
| 6. | தென்மொழி ஞானபண்டிதன ஞான சுப்பரமணியன் | திருக்குறள் சிறப்பியல் களஞ்சியம் | பகுத்தறிவு வெளியீடு கோவை ப.எ:189 ப.எ:9 |
| 7. | க. தேவணன் திருவள்ளுவர் மதம் | வாய்க்கால் ஆயக்காட்டுதாரர் நலச்சங்கம். கள்ளிப்பட்டி | ப.எ:72 |
| 8. | தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் | நூற்பா 5 | |
| 9. | டாக்கடா மு. வரதராசனார் | திருக்குறள் தெளிவுரை | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கு.எ: 10 கு.எ: 423 கு.எ: 358 |
| 10. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1995 ப.எ: 1 | |
| 11. | கு.எ:1 | | |
| 12. | நாலாயிர திவ்யபிரபந்தம் | திருவேங்கடத்தான் திருமன்றம் | தி.வா.மொ. (1.1.3) |
| 13. | அண்ணா | ஸ்ரீமத் பகவத் கீதை | ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை சு.எ: 3 ப.எ:89 |
| 14. | S.V. Radjakrishna sastri | Abarnery sanskrit-Tamil_ English Distionary | Sanskrit Education Socity Channai ப.எ:364 |
| 15. | நாலாயிர திவ்ய பிரபந்தம் | திருவேங்கடத்தான் திருமன்றம் | தி. வா. மொ (1-3-5) |
| 16. | நாலாயிர திவ்ய பிரபந்தம் | திருவேங்கடத்தான் திருமன்றம் | தி. வா. மொ (10-10-9) |
| 17. | நாலாயிர திவ்ய பிரபந்தம் | திருவேங்கடத்தான் திருமன்றம் | தி. வா. மொ (8-4-2) |
| 18. | நாலாயிர திவ்ய பிரபந்தம் | திருவேங்கடத்தான் திருமன்றம் | தி. வா. மொ (3-4-7) |
| 19. | கு.எ:8 | | |
| 20. | கு. எ:30 | | |
| 21. | தி.வா.மொ: (1-7-1) | | |
| 22. | கு.எ:4 | | |
| 23. | தி.வா.மொ:(1-6-5) | | |
| 24. | மு. கோவிந்த சாமி | திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு ப.எ:215 |
| 25. | கு.எ:5 | | |
| 26. | தி.வா.மொ:(1-6-9) | | |
| 27. | கு.எ:7 | | |
| 28. | தி.வா.மொ:(2-3-2) | | |
| 29. | தி.வா.மொ:(6-3-9) | | |
| 30. | கு.எ:9 | | |
| 31. | தி.வா.மொ:(1-6-7) | | |

| | | | |
|---|---|---|---|
| 32. | திருக்குறள் மூலமும் பரிமேழலகர் உரையும் | தென்னிந்திய சைவசித்தாந்த பதிப்பு | ப.எ:6 |
| 33. | டாக்டர் மாடபூசி வரதராஜன் | வைணவமலர்கள் | ஸ்ரீ அனந்த் பதிப்பகம் திருப்பதி 2004 ப.எ:18 |
| 34. | கு.எ:350 | | |
| 35. | தி.வா.மொ:(1-2-5) | | |
| 36. | கு.எ:349 | | |
| 37. | கு.எ:365 | | |
| 38. | கு.எ:27 | | |
| 39. | தி.வா.மொ:(7-8-9) | | |
| 40. | தி.வா.மொ:(6-9-1) | | |
| 41. | திருமூலர் திருமந்திரம் | பா. எ:2146 | |
| 42. | கு.எ: 610 | | |
| 43. | தி.வா.மொ:(7-6-1) | | |
| 44. | நாகர்கோவில் கிருஷ்ணன் | ஸ்ரீவிஷ்ணுபுராணம் | குமரன் பதிப்பு சென்னை ப.எ:9 |
| 45. | கு.எ:1103 | | |
| 46. | தி.வா.மொ:(2-6-3) | | |
| 47. | தி.வா.மொ:(3-8-8) | | |
| 48. | S.ஜெகத்ரட்சகன் | அஷ்டப்பிரபந்தம் | ப.எ:66 பா.எ:72 |
| 49. | தி.ரமா (ஆய்வாளர்) அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி | திருவள்ளுவரின் களவியல் கோட்பாடு | தியாகராஜா பதிப்பு ப.எ:73 |
| 50. | கு.எ:1101 | | |
| 51. | தி.வா.மொ:(5-3-4) | | |
| 52. | தி.வா.மொ:(5-3-4) | | |
| 53. | கு.எ:1147 | | |
| 54. | கு.எ:1164 | | |
| 55. | நா.திரு.(5-4) | | |
| 56. | கு.எ:1157 | | |
| 57. | நா.திரு. (11-2) | | |
| 58. | தொல்காப்பியம் | பொருளதிகாரம் | நூற்பா.54 |
| 59. | கு.எ:1130 | | |
| 60. | சி.திரு.ம | | அ.எ:39 |
| 61. | பெ.திரு.ம | | அ.எ:77 |
| 62. | தி.வா.மொ:(5-3-9) | | |
| 63. | பெ.தி.மொ:(6-1-1) | | |
| 64. | முனைவர் தி. முருகரத்னம் | வள்ளுவரை அறிந்தோமா தமிழ்ச்சோலை | மதுரை ப.எ:90 |
| 65. | கு.எ:49 | | |
| 66. | கு.எ:247 | | |
| 67. | கு.எ:1103 | | |
| 68. | கு.எ:1084 | | |
| 69. | பெரியா. தி.மொ (4-5-4) | | |
| 70. | ஔவை.க.துரைசாமி பிள்ளை | புறநானூறு (1.200பா) | பா.எ: 408 பா.எ:188 |
| 71. | கு.எ:64 | | |
| 72. | பெரு.தி.மொ(7-6) | | |
| 73. | ஞா.மாணிக்கவாசன் | சிலப்பதிகாரம் | உமாபதிப்பு சென்னை ப.எ:288 பா.எ:75 |
| 74. | கு.எ:86 | | |

| | | | |
|---|---|---|---|
| 75. | பெரியா.தி.மொ.<br>(4-8-2) | | |

.

**விளக்கக் குறிப்பு:**

76. சு.எ. - அடி எண்
77. சு.எ. - சுலோக எண
78. ப.எ. - பக்க எண்
79. பா.எ - பாடல் எண்
80. கு.எ. - குறள் எண்
81 தி.வா.மொ. - திருவாய்மொழி
82. நா.திரு. - நாச்சியார் திருமொழி
83. பெரியா. தி.மொ - பெரியாழ்வார் திருமொழி
84. பெரு. தி. மொ. - பெருமாள் திருமொழி
85. சி.திரு.ம. - சிறிய திருமடல்
86. பெ.திரு.ம - பெரிய திருமடல்